ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2294/34 - 2022 අගෝස්තු මස 24 වැනි බදාදා - 2022.08.24

2294/34 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) என்னும் பிரிவின் கீழ் குச்சவெளி பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

குச்சவெளி பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, கட்சியின் உறுப்பினராக உள்ளமை இல்லாதொழிந்தமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், குச்சவெளி பிரதேச சபையின் அரபாத் நகர்-03 வட்டாரத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட அமீன் பாரீஸ் என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான குச்சவெளி பிரதேச சபையின் அரபாத் நகர்-03 வட்டாரத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக அப்துல் ரசாக் முஜீபு ரகுமான் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

குச்சவெளி பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான பியுமி ஆட்டிகல ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு அப்துல் ரசாக் முஜீபு ரகுமான் என்பவர் குச்சவெளி பிரதேச சபையின் அரபாத் நகர்-03 வட்டாரத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**பியுமி ஆட்டிகல,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
குச்சவெளி பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
திருகோணமலை,
2022, ஓகத்து 23.

EOG 08-0228

1A - G 37326 — 26 (2022/08)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) என்னும் பிரிவின் கீழ் குச்சவெளி பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

குச்சவெளி பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், குச்சவெளி பிரதேச சபையின் ஜாயா நகர்-05 வட்டாரத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட அப்துல் காதர் மொஹமட் மீசன் என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான குச்சவெளி பிரதேச சபையின் ஜாயா நகர்-05 வட்டாரத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக அப்துல் கபூர் பலீல் அமீன் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

குச்சவெளி பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான பியுமி ஆட்டிகல ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு அப்துல் கபூர் பலீல் அமீன் என்பவர் குச்சவெளி பிரதேச சபையின் ஜாயா நகர்-05 வட்டாரத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**பியுமி ஆட்டிகல,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
குச்சவெளி பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
திருகோணமலை,
2022, ஓகத்து 23.

EOG 08-0229

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.